

# அமரர்
# சுப்பிரமணியம் ஜெயராசா
# அவர்களின்
## நினைவேந்தும் மலர்

19.09.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மாராட்சி மிருசுவிலைச் சேர்ந்த

அமரர்

## சுப்பிரமணியம் - ஜெயராசா (குஞ்சுராசா)

அவர்களின்

பிரிவு குறித்த

# நினைவேந்தல் மலர்

## 2011.09.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்

தந்தையைப் போல தெய்வம்
தரணியில் இல்லை என்று
முந்தையோர் எடுத்துச் சொன்ன
முறைமையும் அது தானன்றோ
சிந்தையில் நினைந்து இந்தச்
சிறப்புக்கள் பலவும் செய்து
தந்தைக்கு நாம் வழங்கும்
சமர்ப்பணம் இது தானையா

குருக்கள் மாவடி,
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

இங்ஙனம்
மனைவி,
பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 06ஆம் மாத நினைவாக

தோற்றம்
1962 . 10 . 14

மறைவு
2011 . 03 . 24



திதி.2011.09.19

## அமரர். சுப்பிரமணியம் ஜெயராசா

அவர்கள்

### திதி வெண்பா

ஆண்டாம் விகிர்தி ஆன பங்குனி பத்தில்
பூண்ட திதி அபரபக்கம் ~ குருவாரச் ஷஷ்டி தனில்
குஞ்சுராசா என்றழைக்கும் கோமகனாம் ஜெயராசா
துஞ்சலுற்ற நாளென் றறி

கண்ட விகிர்தி கார்பங்குனி பத்தில்
அண்டும் ஷஷ்ஷ அபரதிதி ~ கொண்ட குரு
சேர்ந்திருந்த செம்மல் திருவுடையான் ஜெயராசா
சார்ந்து விட்டான் ஈசன் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# குலதெய்வம் பைரவர் துதி

திருச்சிற்றம்பலம்

சீரானைச் சிறந்த புளியடியானை ஜெகம் போற்ற வந்தானை - செழுங்கமலக் கண்ணானை
பூநகரியூரிந்து பூனையாய் வந்தானை போற்று மெய்யடியார் வினை தீர்ப்பானை
காரானை முகத்தானாம் கணபதிரு இளையானை கருங் குதிரை வாகனனை-
இடுக்கன் வாராதிருக்க வரமளிப்பீர் வைரவரே காப்பு.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே.

## திருவாசகம்

வேண்டத்தக்கதறி வோய்நீ வேண்டமுழுதும் தருவோய் நீ
வேண்டுமயன் மாற்கரியோய் நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாதருள் செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரி சொன்றுண் டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக் ஆட்
பாரும் விசும்பும் அறியும்பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன் மலர்த்தா ளெழுதா மறையின்
ஒன்று மலரும் பொருளேயருளே யுமை யேயிமையத்
தன்றும் பிறந்தவளேயழியா முத்தியானந்தமே.

## திருப்புகழ்

பாதி மதி நதி போதும் அணிசடை
நாதனருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மண வாளா
காது மொரு விழி காகமுறவருள்
மாயனரு திரு மருகோனே
காலனெனை அணுகாமல் உனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறை மீளா
ஆடும் மயிலினில் ஏறி அமரர்கள்
சூழ வலம் வரும் இளையோனே
சூதம் மிகவளர் சோலைமருவு
சுவாமி மலை தனில் உறைவோனே
சூரன் உடலறவாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத்தடம்

முத்தமிழ் போற்றும் முது பெரும் ஈழ
உத்தர திசையில் ஓம்பிடும் பதியாம்
மெத்தவே கற்றவர் மிகுந்துள யாழின்
குணதிசை மேவிக் குன்றென உறையூர்

தெங்கொடு மா பலா சிறந்திடு பெண்ணையும்
கன்னலும் கமுகும் கதலியும் நிறைந்திடும்
செந்நெல் வயல்கள் சிறந்திடு மோடைகள்
பல்வகை வளங்களும் பாங்குடன் பெற்றிடும்
வழுதுணை மிளகாய் மரவள்ளி பயற்றை
மிகு பெறப் பயிர் செய் மிருசுவில் பதியில்
சைவமும் தமிழும் தழைத்து முன்னேற
தெய்வத் தலங்களும் செழிப்பின்றிச் சார
விநாயகர் அம்பாள் விளங்கிடு பைரவர்
முருகனாலயமும் முன்னுறப் பெற்றது
திருமகள் கடாட்சம் சீர்வளம் காட்டிட
மருமகள் வாணியும் மதிவளம் நல்கிட
கண்ணிய வான்களும் புண்ணிய சீலரும்
எண்ணியே நல்லறம் இனிதே ஆற்றிடும்
புண்ணிய பதியில் பூமாலை தொகுக்கும்
கண்ணிய வானாம் கனகசபை சுதன்
சுப்பிரமணியமும் சுந்தர முகத்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமுத்து அம்மையும் அளித்த
ஐயிரு கொடையில் ஆறாம் கொடையாய்
வந்து உதித்த வடிவுடையானாம்
அன்பின் வடிவாய் அறத்தின் படிவாய்
பண்பின் நிறைவாய் பாரினில் உதித்தனன்
குஞ்சுராசா எனக் குறும்புடன் ஊரார்
விஞ்சியே போற்றிடும் ஜெயராசாவே
இளமைக் கல்வியை வழமைபோல் நீயும்
பழகிய பள்ளியில் படித்து முடித்து
தந்தைக் குதவியாய் தனயனும் இருந்தே
செய் தொழில் முயற்சிகள் செய்திடும் காலை
தன் தொழில் கெடுதல் தனக்கிடன் என்று
முந்தை யோர் கூறிய முது மொழிக்கிணங்க
மலர் பல பறித்த மாலைகளாக்கி
மலரவன் தொண்டினை மகிழ்வொடு ஏற்றனன்
இப்படியாக இருக்கும் காலையில்
சொற்பொடி தவறா தூயவன் தானும்
அக்கா, தங்கா வதுவைகளாற்றி
அன்புடன் வாழந்தனன் அம்மாவுடனே
வாலிபமெய்தி வனப்புற வளர்ந்து
காளையாகிக் கவின் தருங்காலை
சொந்த மரபின் தொடர்பு கெடாமல்
சிந்தை மகிழ்ந்து திருமணம் கருதி
சிவபால சுப்பிர மணியமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர் பெறு நன்மனை நாகேஸ்வரியும்
பண்ணிய தவத்தால் பாரினில் உத்த
சீருடைச் செல்வியாம் சிரேஷ்டபுத்திரி
மதிவதனியை மனைவியாய் ஏற்று
மகிழ் வொடு இல்லறம் நடாத்திடும் காலை
ஜெகத்தினினுள்ளோர் ஜெகன் என அழைத்திட
ஜெயகாந்தன் தன் னொடு ஜெயக்குமார் தன்னையும்
ஜெனுஷிகா, ஜெனுஷன், ஜெனனிகா என்னும்
பஞ்சவர் ஐவரைப் பாரினிற் பெற்றனர்.
மக்கட் தாகமும் மாண்புறக் கண்டே
மிக்கவும் மகிழ்ந்தே மேதினி போற்றப்
பிரிய மாய் அன்பொடு பேணி வளர்த்தே
அரிய நற்கலைகள் அனைத்தையும் பெற்றிட
பக்குவ மாகப் பள்ளிக் கனுப்பி
தக்க வயதிலே தழிழறி வூட்டி
துணையாய் ஆங்கிலச் சுவையொடு பல்கலை
இணைவதும் நோக்கி இன்பங் குளிர்ந்தாய்
பல பல விதமாய்ப் பாதைகள் வகுத்தே
நிலபுலம் பசு நிலை நிதியமுங் காட்டி
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிதென
உழு தொழிலதனையும் துணை தொழிலாக்கி
வகு பொருளீட்டியே வம்சம் சிறப்புற
பெருவினை ஆற்றிய பிதா மகள் நீயே
பரம்பரை விரித்திடும் பான்மையைக் கண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பவும் வாழ்வில் நின்மதி கண்டாய்
அழகிற் சிறந்த ஆண்மையில் உயர்ந்து
சத்திய நெறியிற் தலைமை பூட்டவனே
உத்தம குணத்தில் ஓங்கிய வள்ளலோ
எப்படி மறப்போம் இயம்பிடும் ஐயா
இன்பக் கோட்டையில் இடி விழுந்தது போல்
துன்பச் சோதனை தந்தது முறையோ
பிறவி எடுத்த பெருங்கடன் எல்லாம்
நிறைவுறக் கண்டோ நீயும் மறைந்தாய்
மஞ்சள் குங்குமம் மறுப்பட வைத்து
துஞ்சியே போக எண்ணினை ஏனோ
தாங்குமோ இதயம் தவிக்குக்தே உள்ளம்
மாண்டு போனாலும் மறப்பபோ ஐயா
சொன்ன விகிர்தி தேய்பிறைப் பங்குனி
மன்னு ஷஷ்டி வரு குருநாளில்
நாற்பத் தெட்டாண் டென்றும் அகவையில்
நாதன் தாளினை பற்றினை ஏனோ
உன் குல விருட்சம் ஓங்கி வளரு முன்
மன்குலம் மதிக்கச் சென்றது தகுமோ
உந்தன் உத்தமி உண்பதொழிந்து உறக்கமிழந்து
துயருற்றிக்க
உற்ற உன்பிறப்புகள் ஓ வெனக் கதற
மற்றைய உறவுகள் மனது கலங்கிட
மண்ணக வாழ்வின் மயக்க மொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வின் மயக்க மொழிந்து
தீப மேந்திய சிறிசுகள் கலங்க
தாபம் மிஞ்சியுள் சந்ததி புலம்ப
வானமும் பூமியும் மழைநீர் சொரிய
தானவன் தாழினை பற்றினன் சரணம்
ஓம்சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**சுபம்**

## தேற்றம்

விட்டு விடப் போகுதுயிர் விட்டவுடன் உடலைச்
சுட்டு விடப் போக்கின்றார் சுற்றார்தார்
பட்டது பட்டன்னே நஞ்சிவனை ஏற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே துணை

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பெயரிட்டு
சூரையங் காட்டிடை கொண்டு போய் சூட்டிட்டு
நீரில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா(து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே 01

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன, போயென்னெ கச்சியேகம்பனே. 02

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தேகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே! 03

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே. 04

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே. 05

ஐயுற் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே.

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தார்கங்குண்டு பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு அத்தன்மையைப் போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லா உண்டு உன்னைப்பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தியீச்சரனே. 07

வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயங்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றிலேன் புகழிவாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்தவன் நின்அருளால் கயிலாயத்தானே 08

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானுடமே 09

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையு முண்டே 10

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கள்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.
பாசம் பரஞ்சோதி கென்பாய் இராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந் தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடந்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுண் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையாவழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக ளாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடலோ ரொம்பவாய்

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

போற்றியருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை



## வெண்பா

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

## சரஸ்வதி வழிபாடு

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
        தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
        லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
        தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
        சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
        தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
        வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
        கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
        சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைமெகாள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிதுணை

ஓம் சக்தி

# கௌரிக் காப்பு



விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லவோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தணச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத திங்களியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரும் மருத்துவக் குறிப்புக்கள்

**வயிறு சம்பந்தமான நோய்கள் தீர**

* உணவுக்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பே தேனை நீரில் கலந்து பருகு, வயிற்று புளியேப்பம் மாறும்.

* தினசரி அன்னாசிப்பழத்தை உண்டுவர வயிற்றுப் பூச்சி ஒழியும்.

* அடி வயிற்றில் ஏற்படும் பிரச்சினைகளைப் போக்க அன்னாசிப்பழத்தை உண்ணலாம்.

* வயிற்றுக் கடுப்பைப் போக்க ஆப்பில் பழம் உண்ணலாம்.

* வயிறு சுத்தமாக இருக்க தினந்தோறும் தக்காளிப் பழத்தை உண்ணலாம்.

* பாகற்காயை உண்டு வந்தால் வயிற்றுப் புழுக்கள் அழிந்திவிடும்.

* வயிற்றுக் கடுப்பு கோளாறு போக்க மாதுளைப் பழத்தை உண்ணலாம்.

* வயிற்றுப் போக்கு மற்றும் வயிற்றுக் கடுப்புக்கு விளாம்பழம் கை கண்ட மருந்தாகிறது.

* வயிற்றில் புண் இருப்பவர்கள் இளநீரைப் பருகி, புண்ணைக் குணமாக்கலாம்.

* மாதுளம் செடியின் வேரை நீர்விட்டுக் காய்ச்சிப் பருக வயிற்றுப் பூச்சிகள் அழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடல், குடல்புண் தொடர்பான நோய்கள் தீர

* அகத்திக் கீரையை வாரம் ஒரு முறை தொடர்ந்து உண்டு வர எப்பேர்ப்பட்ட குடல் புண்ணும் குணமாகும்.

* குங்குமப் பூ தூளை தேன் கலந்து சாப்பிட்டு வர குடல் புண் ஆறும்.

* குடல்புண் உள்ளவர்கள் அகத்திக் கீரையை சாப்பிடலாம்.

* வல்லாரை கீரை இலைகளை வாயில் போட்டு மென்று சிறிதாக சாறை உறிய குடல்புண் ஆறும்.

* மாம்பழத்தை உண்ண குடல் வலுப்பெறும்.

* குடலில் உள்ள நச்சுக் கிருமிகளைக் கொல்ல ஆப்பிள் பழத்தைச் சாப்பிடலாம்.

* நாவல்பழத்தின் விதையை நீக்கி ஜுஸ் செய்து சாப்பிட்டால் குடல் நோய்கள் குணமாகும்.

* அதிமதுரம் சிறிதை எடுத்து பொடியாக்கி நெய் அல்லது தேன் கலந்து உண்ண வயிற்றுப்புண் நீங்கும்.

* ஒரு வெற்றிலையோடு சிறிது சீரகம், உப்பு இரண்டையும் சேர்த்து தின்ன வயிற்று அஜீரணம் நீங்கும்.

* வேப்பிலைக் கொழுந்தை வெறும் வயிற்றில் உண்ண வயிற்றுப் பூச்சிகள் அழியும்.

## பல், வாய் தொடர்பான நோய்கள் நீங்க

* பூண்டுடன் சிறிது ஓமத்தை நசுக்கிப் போட்டு கசாயமாக்கிக் கொடுக்க, குழந்தைக்கு வரும் கொட்டாவி குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நந்தியாவட்டை வேரை நன்றாக மென்று துப்ப பல்வலி சரியாகும்.

* எலுமிச்சம் சாறுடன் நீர் கலந்து வாயைக் கொப்பளித்தால் வாய் துர்நாற்றம் போகும்.

* அகத்திக்கீரை பற்களுக்கு வலுவூட்டுகிறது.

* பசளிக்கீரையை உண்பதால் பற்சிதைவு வராமல் பாதுகாக்கலாம்.

* வாய்ப்புண் உள்ளவர்கள் அகத்திக் கீரையை உண்ணலாம்.

* சோயா உணவில் கல்சியம், மக்னீசியம், பொஸ்பரஸ், சத்துக்கள் அதிக அளவில் இருப்பதால் பற்கள் எலும்புகள் வலுப்பெறுகின்றன.

* வல்லாரை கீரையை கொஞ்சம் எடுத்து வாயில் மென்று சாப்பிட்டால் பல் சொத்தை, வாய் நாற்றம், வாய்ப்புண் ஆகியவை நீங்கிவிடும்.

## இரத்தச்சோகை, இரத்தம், இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம் சம்மந்தமானவை நீங்க.

* இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் காய்ச்சிய பசும்பாலில் 2-3 வெள்ளைப் பூண்டை போட்டு வேக வைத்து உண்ணலாம்.

* தினசரி ஒரு சிட்டிகை குங்குமப்பூவை தேன் கலந்து சாப்பிட இரத்தம் சுத்தமாகும்.

* உப்பைக் குறைத்தால் இரத்தக் கொதிப்பு குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நாவல் பழக் கொட்டையை பொடி செய்து காலை மாலை சாப்பிட்டு வர இரத்தம் விருத்தியாகும்.

* இரத்தச் சோகைக்கு ஆப்பிள் அருமருந்து.

* இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அகத்திக் கீரையை உண்ண வேண்டும்.

* காசினிக் கீரையுடன் பயத்தம் பருப்பைச் சேர்த்து வந்தால் இரத்தம் அதிகரிக்கும்.

* நெல்லிக்காய் இரத்தத்தைச் சுத்திகரிக்கிறது.

* ரத்தக் கொதிப்பை அடக்க வேண்டுமானால் கரட்டை சாப்பிட வேண்டும்.

* செம்பருத்திப் பூ இரத்தத்தை தூய்மையாக்கிறது.

* இரத்தம் இல்லாதவர்களுக்கு வெள்ளரிக்காயை உண்ண இரத்தம் ஊறும்.

* இரத்த ஓட்டம் சீராக அமைய நாவல் பழம் பயன்படுகிறது.
* இரத்தத்தில் கொழுப்பை நீக்கும் சக்தி பூண்டுக்கு உள்ளது.

**வாயு பிடிப்பு, வாயுத் தொல்லையிலிருந்து விடுபட**

* வாயுத் தொல்லை உள்ளவர்கள் உருளைக் கிழங்கை சாப்பிடக் கூடாது.

* வாயுவைப் போக்க தக்காளிப் பழம் பயன்படுகின்றது.

* முடக்கத்தான் கீரையை அவித்து சாறு எடுத்து ரசமாக்கி உணவோடு வாரம் ஒரு முறை சாப்பிட வாயுக் கோளாறுகள் அகலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உணவில் இஞ்சி, பூண்டு இவற்றை சமைத்து சாப்பிட்டு வந்தால் எப்போதும் வாயு தொல்லை ஏற்படாது.

**நெஞ்சுவலி, நெஞ்சுக் குத்தல், நெஞ்செரிச்சல் போன்றவைகள் குணமாக**

* பூண்டு, இஞ்சியை சம அளவு இடித்து வாறு பிழிந்து 3 நாட்கள் பருக நெஞ்சுக் குத்தல் சரியாகும்.

* அதிமதுரத்தை வாயில் போட்டு அடக்கிக் கொள்ள நெஞ்சுக் கமறல் நிற்கும்.

* குப்பை மேனி இலையை காயவைத்து பாலில் கலந்து ஒரு வாரம் சாப்பிட்டு வந்தால் நெஞ்சுவலி நீங்கும்.

**சர்க்கரை நோய் நீரிழிவு நோய் நீங்க**

* நீரிழிவு நோய் உள்ளவர்கள் புகைபிடித்தல் ஆகாது.

* முருங்கை இலைச் சாற்றை தினமும் அருந்திவர நீரிழிவு கட்டுப்படும்.

* மாந்தளிரை சூரணம் செய்து நீரில் கொதிக்க வைத்துப் பருக நீரிழிவு கட்டுப்படும்.

**இருமல், வறட்டுஇருமல், சளித்தொல்லை, கபம், ஜலதோஷம் போன்ற தொல்லைகளிலிருந்து விடுபட**

* சாத்துக்குடி சாறை வெந்நீரில் கலந்து குடித்தால் சளித்தொல்லை நீங்கும்.

* அதிகமாக இருமல் இருக்கும்போது சில துளசி இலைகளை மென்று சாறை விழுங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஜலதோஷம் உள்ளவர்கள் துளசியை இஞ்சியுடன் சேர்த்து இடித்து சாறு எடுத்துப்பருகி, குணம்பெறலாம்.

* இருமல் உள்ளவர்கள் தேனுடன், துளசி, இஞ்சி சாறையும் கலந்து குடித்தால் இருமல் மறையும்.

* வெற்றிலைச் சாறை இரண்டு சொட்டு மூக்கில் விட மூக்கில் இருந்து சளி ஒழுகுதல் நிற்கும்.

* தேங்காய் எண்ணெயில் கற்பூரத்தைப் போட்டு, லேசாக சூடாக்கி மார்பிலும், முதுகிலும் தேய்க்க குழந்தைகளின் சளி குறையும்.

* மிளகுத்தூளுடன் நெல்லிக்காய் சாறும் தேனும் கலந்து சாப்பிட சளியும் மூக்கடைப்பும் நீங்கும்.

* துளசியை சாப்பிட்டால் சளி குறையும்.

* சளியால் அவதிப்படுபவர்கள் ஓமவல்லி இலைக் காம்புகளை குடிநீராக்கிக் குடித்துவர குணம் தெரியும்.

* வெங்காயச்சாறை 15 மில்லி அளவுக்கு காலை, மாலை 4 நாட்கள் கொடுத்துவர புகைப்பதால் வரும் இருமல் குணமாகும்

* மிளகை வறுத்து அரைத்து தேன் கலந்து சாப்பிட இருமல் நீங்கும்.

* எலுமிச்சை சாறில் தேன் கலந்து சாப்பிட்டால் வறட்டு இருமல் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1962
.
10
.
14



விண்ணில்
2011
.
03
.
24

## அமரர் திரு. சுப்பிரமணியம் ஜெயராசா

தாயைப் போல் எம்மைக் காத்த
எம் அருமை அத்தானே
எம்மை விட்டு எங்கு சென்றீரோ
தாயை சகோதரியை
இழந்து தவித்த போது உங்களுக்கு
நான் இருக்கின்றேன் எனக் கூறினீரே
எம்மை ஏமாற்றி விட்டீரே
நாம் இனி எப்போது உமது
திரு முகத்தைக் காண்போம்
எம்மை நல்வழிப் படுத்திய உமக்கு
எங்கள் கண்ணீரை தான் காணிக்கை
யாக்க முடிகின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குருக்கள் மாவடி,
திருக்கோவில் வடக்கு,
திருக்கோவில்.

மைத்துனர், மைத்துனிமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில்
1962.10.14

ஆண்டவன் அடியில்
2011.03.24

மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## திரு.சுப்பிரமணியம் ஜெயராசா

குடும்பத்தின் குலவிளக்கே

பாசத்தின் பிறப்பிடமே

உம் உறவுகள் படும் வேதனையைப் போக்க

ஓடி வாராயோ விரைந்து ஓடி வாராயோ

நினைக்க முடியாத கணப்பொழுதில்

சடமாய் உறவுகளை சோகக் கடலில்

மூழ்க வைத்துவிட்டு சென்றதேனோ?

அன்னாரின் மறைவினால் ஆறாத்துயரில் இருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மணி குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்




எமது தந்தையின் மறைவையிட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தமது அனுதாபத்தினைத் தெரிவித்தவர்களுக்கு இறுதிக் கிரிகைகளை நடாத்தி வைத்த குருமார்களுக்கும் மற்றும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர் நண்பர்கள், அயலவர் யாவருக்கும் இன்னும் இந்நூலை ஆக்கியோன், அச்சிட்ட சிவாபதிப்பத்தினர் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றிகள்.

குருக்கள் மாவடி,
மிருசுவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




*அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா பதிப்பகம், 05, கனகபுரம், கிளிநொச்சி.